**இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் - 2018**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் (‘‘கூட்டுத்தாபனம்’’) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

-----------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்) உடன் இணக்கமின்மை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **எல்கேஏஎஸ் - 01, நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**<br>இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தினால் தேவைப்படுத்தப்பட்டால் அல்லது வேறு வகையில் அனுமதிக்கப்பட்டால் அன்றி, நியமத்தின் 32 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வருமானங்களும் செலவினங்களும் ஒன்றிற்கொன்று ஈடுசெய்யப்படக் கூடாது. இருப்பினும், வியாபார செலுத்த வேண்டியவை, பெறப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணக் கணக்குகள், உப ஒப்பந்ததாரர் செலுத்த வேண்டிய கணக்குகள் மற்றும் அட்டுறு கணக்குகளின் வரவு மீதிகள் என்பன அந்தத்தக் கணக்குகளின் செலவு | 2020 இன் நிதிக் கூற்றுக்களிலிருந்து அனைத்து வரவு மீதிகளையும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிறுவனம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதை கூட்டுத்தாபனம் உறுதி செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| மீதிகளிற்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தன. ஆகையால் அத்தகைய கணக்குகளின் செலவு மீதிகள் முறையே ரூபா 39,293,994, ரூபா 183,873,754, ரூபா 155,061,389 மற்றும் ரூபா 349,822,732 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | | |
| (ஆ) **எல்கேஏஎஸ் - 16, ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**<br>முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த ரூபா 830,124,061, ரூபா 5,646,691, ரூபா 102,931,800, ரூபா 57,910,500 மற்றும் ரூபா 45,827,272 கிரயமான முறையே இயந்திர உகரணங்கள், தளபாட பொருத்துகள், மோட்டார் வாகனங்கள், கணனி வன்பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன அத்தகைய சொத்துக்களின் பொருளாதார பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாமலும் அதற்கமைய எல்கேஏஎஸ் - 16, ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பதன் 51 ஆம் பிரிவின் படி அவை கணக்கீடு செய்யப்படாமலும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டிருந்தன. | சொத்துக்களின் பயனுள்ள யுட்காலத்தை மீள் மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியமில்லை.<br>பொருளாதார ரீதியாக எந்த நன்மையும் இல்லை என்பதே முக்கிய காரண மாகும். | ஒரு சொத்தின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் ஆகியவை குறைந்த பட்சம் ஒவ்வொரு நிதியா ண்டு முடிவிலும் மீளாய்வு செய்யப்பட்டு, எதிர்பார்ப்பு கள் முன்னைய மதிப்பீடு களிலிருந்து வேறுபட்டால், கணக்கீட்டு மதிப்பீட்டில் ஏற்பட்ட மாற்றங்களாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) **எல்கேஏஎஸ் - 37, ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்**<br>2010 முதல் 2017 வரையான காலத்திற்கான பெறுமதி சேர் வரி மற்றும் 2016 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய தேசத்தைக் கட்டியெழுப் பும் வரி (NBT) இனைச் செலுத்தாமை காரணமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் விதிக்கப்பட்ட முறையே ரூபா 131,946,654 மற்றும் ரூபா 13,924,025 தொகையான தண்டப்பணங் களிற்குரிய ஏற்பாடுகள் நிதிக்கூற்று க்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரி திணைக்களம் பொது அறிவிப்பை வெளியிட்ட துடன் கூட்டுத்தாபனத்தி ற்கும் அது குறித்து தெரிவிக்கப்பட்டது.<br>2022.03.31 அன்று அல்லது அதற்கு முன்னர் நிலுவை யான வரிகளை கூட்டுத் தாபனம் செலுத்தினால், அதன் மீது விதிக்கப்பட்ட அபராதம் தள்ளுபடி செய்யப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.<br>எனவே, இந்த நிகழத்தக்க பொறுப்பு எதிர்காலத்தில் ஏற்படுவதற்கு வாய்ப்பி ல்லை. | நிதிக் கூற்றுக்களில் சரியான ஏற்பாட்டை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காசுக்கட்டளை முற்பணத்துடன் கூடிய காசோலை, விசேட காசு முற்பணம், சேவைகளுக்கான முற்பணம், தொழிலா ளர் உப ஒப்பந்த முற்பணங்கள், ஒப்பந்த | செலவு மீதிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கணக்குகளை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொழிலாளர் கட்டுநிதி, பெறத்தக்க பிடிகாசு மற்றும் பெறத்தக்க ரீசீ மீதி ஆகிய பேரேட்டுக் கணக்குகளில் முறையே ரூபா 229,625,808, ரூபா 20,855,040, ரூபா 11,498,462, ரூபா 37,250,161, ரூபா 180,856,217, ரூபா 120,100,693 மற்றும் ரூபா 997,774,902 தொகையான வழக்கத்திற்கு மாறான செலவு மீதிகள் காணப்பட்டமையால், அந்த தேதியில் உள்ளவாறான அக்கணக்குகளின் மீதிகள் அதனை யொத்த தொகைகளால் குறைத்துக் கூறப்பட்டுள்ளன. | | |
| (ஆ) கணிப்பீட்டுத் தவறு காரணமாக ஏகல தளத்திலுள்ள இருப்பின் பெறுமதி ரூபா 2,488,994 ஆல் குறைத்துக் கூறப்பட்டிருந் தது. | கணிப்பீட்டுத் தவறு திருத்தப் பட்டது. | கணக்குகளை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டின் இறுதியில் கணிப்பீட்டுத் தவறு காரணமாக கடன்பட்டோர் மீதான நட்டக்கடன் ரூபா 1,260,672 ஆல் அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | கணிப்பீட்டுத் தவறு திருத்தப் பட்டது. | கணக்குகளை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) தேசிய உபகரண மற்றும் இயந்திரங்கள் நிறுவனத்தின் (NEMO) அலுவலக உபகரணங்களின் தேய்மானம் கணிப்பீட்டுத் தவறு காரணமாக ரூபா 1,607,245 ஆல் குறைத்துக் கூறப்பட்டிருந்தது. | அவதானிப்புக்கு NEMO இன்னும் பதிலளிக்கவில்லை. | கணக்குகளை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 110.2 மில்லியன் பெறுமதியான காணி மற்றும் கட்டிடம் NEMO இற்கு சொந்தமானதாக காணப்படாத போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் கட்டிடத்தின் தேய்மானம் ரூபா 5,010,817 ஆகவும், ஆண்டுக்கான தேய்மானம் ரூபா 889,909 ஆகவும் காட்டப்பட்டுள்ளது. | அவதானிப்புக்கு NEMO இன்னும் பதிலளிக்கவில்லை. | கணக்குகளை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) கூட்டுத்தாபனம் மற்றும் NEMO ஆகியவற்றின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட் டுள்ள குழுமத்துக்கு இடையேயான மீதிக்கு இடையே ரூபா 70,979,175 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | NEMO இற்கும் கூட்டுத்தாப னத்துக்கும் இடையிலான நடப்புக் கணக்கு நிலுவை களை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் மீதிகளை கணக்கிணக்கம் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள இலங் கை இரயில்வேயிலிருந்து பெறவேண்டிய மீதிக்கும் இலங்கை இரயில்வேயிலிருந்து பெற்றுக்கொண்ட மீதி உறுதிப்படுத்தலுக்கும் இடையே ரூபா 116,257,437 வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் மீதியை சரிசெய் வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இலங்கை இரயில்வே இற்கு ம் கூட்டுத்தாபனத்துக்கும் இடை யிலான வேறுபாட்டை கணக்கிணக்கம் செய்ய நடவ டிக்கை எடுக்கப்படுகிறது. | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் மீதிகளை கணக்கிணக்கம் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஏ) 2012 முதல் 2015 வரையிலான காலப்பகுதியுடன் தொடர்புடைய ரூபா 1,328,763 இனங்காணப்படாத வைப்புத் தொகையொன்று NEMO இன் நிதிக் கூற்றுக்களில் தொடர்ச்சியாக காணப்பட்டு வருகின்றது. | அவதானிப்புக்கு NEMO இன்னும் பதிலளிக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் மீதிகளை கணக்கிணக்கம் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| விடயம் | நிதிக்கூற்றின் படி மீதி | நேரொத்த பதிவேட்டின் படி மீதி | வேறுபாடு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| வாடகை வருமானம் | 79,725,302 | 60,899,650 | 18,825,652 | அவதானிப்புக்கு NEMO இன்னும் பதிலளிக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் பேரேட்டு மீதிகளை பட்டோலைகளுடன் கணக்கிணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்காக ஆவணச் சான்றுகள் இல்லாமை**

| விடயம் | | | | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | கணக்கு விடயம் | தொகை | கிடைக்கப் பெறாத சான்று | | |
| | | ரூபா | | | |
| (அ) | NEMO இன் வருமானம்- கட்டிடம் மற்றும் ஏனைய நிர்மாணம் | 203,587,785 | இலாபக் கணிப்பீட்டிற்கான செயற்திட்ட விபரங்கள் - NEMO | அவதானிப்புக்கு NEMO | செயற்திட்டங்களை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக இலாபக் கணிப்பீட்டிற்கான செயற்திட்ட விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். |
| (ஆ) | பொருளிருப்பு – NEMO | 6,781,778 | இருப்புச் சரிபாத்தல் தாள்கள் | | பொருளிருப்பை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக இருப்புச் சரிபாத்தல் தாள்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். |
| (இ) | சேவைகளுக்கான முற்பணம் - NEMO | 1,282,100 | விபரமான பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு | | முற்பண மீதிகளை திருப்திக ரமாக மெய்மையாய்வு செய்து |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | வியாபார பெற வேண்டியவை – NEMO | 828,779,897 | மீதி உறுதிப்ப டுத்தல், விபரமான பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு | இன்னும் பதிலளிக்க வில்லை. | ஏற்றுக் கொள்வதற்காக விபரமான பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | தொழிலாளர் உப ஒப்பந்த முற்பணம் – NEMO | 18,217,056 | விபரமான பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு | | வியாபார பெறவேண்டியவற்றை திருப்திகரமாக மெய்மை யாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக விபரமான பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு என்பன கணக் காய்விற்குச் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். |
| (ஊ) | தொழிலாளர் உப ஒப்பந்த முற்பணம் (செலவு மீதி) – NEMO | 3,632,800 | விபரமான பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு | | தொழிலாளர் உப ஒப்பந்த முற்பணத்தை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக விபரமான பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | வியாபார செலுத்த வேண்டியவை – NEMO | 262,741,890 | விபரமான பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு | | |
| (ஏ) | சில்லறை கடன் கொடுத்தோர் – NEMO | 45,479,048 | காலப் பகுப்பாய்வு | | தொழிலாளர் உப ஒப்பந்த முற்பணத்தை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக விபரமான பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும. |
| (ஐ) | உப ஒப்பந்த செலுத்த வேண்டியவை – NEMO | 23,949,662 | விபரமான பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு | அவதானிப்புக்கு NEMO இன்னும் பதிலளிக்க வில்லை. | வியாபார செலுத்த வேண்டிய வற்றை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக விபரமான பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஒ) | ஏனைய செலுத்த வேண்டிய வரி – NEMO | 1,851,592 | விபரமான பட்டோலைகள் | | சில்லரைக் கடன்பட்டோரை திருப்திகரமாக மெய்மை யாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக காலப் பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும. |
| (ஓ) | வருமான வரிச் செலவவினம் - NEMO | 110,859,971 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் மற்றும் வரிக் கணிப்பீடு | | உப ஒப்பந்த செலுத்த வேண்டிய தொகையை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக விபரமான பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். |
| | | | | | ஏனைய செலுத்த வேண்டிய வரியை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக விபரமான பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். |
| | | | | | வருமான வரிச் செலவினத்தை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் மற்றும் வரிக் கணிப்பீடு என்பன கணக்கா ய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 505,892,674 தொகையான பெறவேண்டிய பிடிகாசுத் தொகை 05 ஆண்டுகளிற்கும் லோக அறவிடப்படாது வைக்கப்பட்டுள்ளது. | பேணுகைக் காலம் முடிவடைந்த பின்னர் குறித்த செயற்திட்டங்களிலுள்ள பிடிகாசு மீதிகளை கடன்பட்டோருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | பெறவேண்டிய பிடிகாசுத் தொகைகளை தாமதமின்றி அறவிடுதல் வேண்டும். |
| (ஆ) ரூபா 1,243,824,377 தொகையான வியாபரக் கடன்பட்டோர் 3 ஆண்டுகளிற்கும் லோக அறவிடப்பட்டிருக்காததுடன் அது மொத்த வியாபாரக் கடன்பட்டோரில் 46 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றது. | 2021 மற்றும் 2022 நிதியாண்டு காலத்தின் போது 3 ஆண்டுகளிற்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதிகளிலிருந்து ரூபா 294.6 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது. | நிலுவையிலுள்ள மீதிகளை துரிதமாக அறிவிட வேண்டுமென்பதுடன் இந்த மீதிகளின் நம்பகத் தன்மையை உறுதிப் படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) சேவைப் பிரிவில் 05 ஆண்டுகளிற்கும் மேலாக தீர்க்கப்படாது வைத்துள்ள முற்கொடுப்பனவு மீதி ரூபா 5,968,160 ஆகும். | 2022 இல் வருமானக் கூற்றுக்கு சாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முற்கொடுப்பனவு மீதிகள் தாமதமின்றி தீர்க்கப்படுதல் வேண் டும். |
| (ஈ) ரூபா 13,734,094 தொகையான வெளிநாட்டுக் கொள்வனவு கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி சேவைப் பிரிவில் அறவிடப்படாமல் 2012 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வருகின்றது. | கணிப்பீட்டுத் தவறு திருத்தப் பட்டுள்ளது. | நிலுவையிலுள்ள மீதிகள் உடனடியாகத் தீர்க்கப்படுதல் அல்லது தாமதமின்றி திருத்தப்படுதல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டியவை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 11,568,973 தொகையான உப ஒப்பந்த தாரர்களிற்குச் வழங்கிய வேலைதொடக்க முற்பணங்கள் 05 ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாதுள்ளன. | இந்தச் சிக்கலுக்கு முக்கியக் காரணம், வாடிக்கையாளர் பல் வேறு தொழில்நுட்பக் காரணங் களால் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படுவதாகும் இதனால் செய்த வேலைக் கான பட்டியல்களை சான்றுறுதிப்படுத்துவதில் தாமதம் ஏற்படுகின்றது. இதன் விளைவாக, கூட்டுத்தாபனம் அதன் ஒப்பந்தக்காரரின் கொடுப்பனவுகளைத் தீர்க்கும் நிலையில் காணப்படவில்லை. எதிர்காலத்தில், இந்த தாமதங்களைக் குறைக்க கூட்டுத்தா | சாத்தியமான நீண்ட கால முற்பணத் தொகைகளை தாமத மின்றி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பனம் அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுத்து ள்ளது | |
| (ஆ) | ரூபா 156,390,311 தொகையான ஒப்பந்த தொழிலாளர் முற்பணங்கள் 05 ஆண்டு களிற்கும் மேலாக தீர்க்கப்பட்டிருக்க வில்லை. | இந்தச் சிக்கலுக்கு முக்கியக் காரணம், வாடிக்கையாளர் பல் வேறு தொழில்நுட்பக் காரணங்களால் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படுவதாகும் இதனால் செய்த வேலைக்கானபட்டி யல்களை சான்றுறுதிப்படுத்து வதில் தாமதம் ஏற்படுகின் றது. இதன் விளைவாக, கூட்டுத்தாபனம் அதன் ஒப்பந் தக்காரரின் கொடுப்பனவு களைத் தீர்க்கும் நிலையில் காணப்படவில்லை. இறுதியா க இது ஒப்பந்தகாரர்களு க்குச் செலுத்திய வேலை தொடக்க முற்பணைங்களை அறவிடுவதில் தாமதங்களை ஏற்படுத்துகின்றது. எதிர்காலத்தில், இந்த தாமதங்களைக் குறைக்க கூட்டுத்தாபனம் அனைத்து சாத்தியமான நடவடிக்கை களையும் எடுத்துள்ளது | சாத்தியமான நீண்ட கால நிலுவைத் தொகைகளை தாமத மின்றி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சேவை நாடுநர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 433,417,409 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் 5 ஆண்டுகளிற்கு மேலாக காணப்பட்டதுடன் அந்த மீதியினை தீர்ப்பதற்காக 2018 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பல்வேறு தொழில்நுட்ப மற்றும் பிற காரணங்களால், பெரும்பாலான காலரீதியான செயற்திட்டங்கள் நிர்ணயிக்க ப்பட்ட காலங்களை விஞ்சு கின்றன. இதன் விளைவாக, வாடிக்கையாளரிடமிருந்து நாங்கள் பெற்ற முற்பண முழுத் தொகையையும் தீர்ப்பதற்கு அதிக காலம் எடுக்கின்றது. காலதாமத த்தை குறைத்து செயற்திட்ட ப்பணியை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டுள்ளன. | சாத்தியமான நீண்ட கால வேலை ஆரம் பிப்பு முற்பணத் தொகைகளை தாமத மின்றி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ரூபா 10,562,151 தொகையான வருமான வரி மீதிகள் 2013 முதல் 2017 வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படாது வைக்கப்பட்டுள்ளன. | கடந்த காலத்தில் செலுத் திய வருமான வரிப் பொறுப்பை தவணை முறையில் தீர்க்க நடவடி க்கை எடுக்கப்படும். | வருமான வரி மீதியை தாமத மின்றி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | ரூபா 513,102,944 கூட்டுமொத்தமான | எமது வாடிக்கையாளர் | சாத்தியமான நீண்ட |

| | | | |
|---|---|---|---|
| | கடன்கொடுத்தோர் மீதிகளில் ரூபா 210,067,402 தொகை 05 ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாமல் காணப்பட்டன. | முக்கியமாக அரசு நிறுவன ங்களாக இருப்பதால் அவர்களிடமிருந்து அறவீ டுகள் தாமதமடைவ தனால், கூட்டுத்தாபனத்தின் வழங்கு னர்கள் மற்றும் கடன் கொடுத்தோருக்கு உரிய நேரத்தில் பணம் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டு ள்ளது. மேலும், அதிகப்படி யான பணியாளர்கள் காரணமாக பெருமளவு நிலையான கிரயங்களை ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும், கூட்டுத்தாபனம் அதன் வழங்குனர்கள் மற்றும் கடன் கொடுத்தோருக்கு தாமதமின்றி நிலுவைகளை தீர்த்துவைக்க தன்னால் முடிந்தவரை முயற்சிக்கிறது. | கால கடன்கொடுத் தோர் மீதிகளை தாம தமின்றி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | ரூபா 1,440,237,909 செலுத்த வேண்டிய ஒப ஒப்பந்தகாரர் தொகையில் ரூபா 905,118,517 ஆனதோர் தொகை 05 ஆண்டுகளிற்கும் மேலாக தீர்க்கப்படாதுள்ளது. | எமது வாடிக்கையாளர் முக்கியமாக அரசு நிறுவன ங்களாக இருப்பதால் அவர் களிடமிருந்து அறவீடுகள் தாமதமடைவதனால், கூட்டு த்தாபனத்தின் வழங்கு னர்கள் மற்றும் கடன் கொடுத்தோருக்கு உரிய நேரத்தில் பணம் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டு ள்ளது. மேலும், அதிகப்படி யான பணியாளர்கள் காரணமாக பெருமளவு நிலையான கிரயங்களை ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும், கூட்டுத்தாபனம் அதன் வழங்குனர்கள் மற்றும் கடன் கொடுத்தோருக்கு தாமதமின்றி நிலுவைகளை தீர்த்துவைக்க தன்னால் முடிந்தவரை முயற்சிக்கிறது. | சாத்தியமான நீண்ட கால செலுத்த வேண்டிய ஒப ஒப்ப ந்தகாரர் மீதிகளை தாமதமின்றி தீர்ப்ப தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 748,045,632 கூட்டுமொத்தமான பெறுமதி சேர் வரியை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறுமதி சேர் வரி மொத்த நிலுவையில் இருந்து ரூபா 748,045,632 தொகை பகுதியளவு கொடுப்பனவாக செலுத் தப்பட்டுள்ளது. | வரிப் பொறுப்பை தீர்ப்பதற்கு நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2009 இன் 09 ஆம் இலக்க தேச த்தை கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 72,066,045 கூட்டு மொத்தமான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | NBT மற்றும் ESC செலுத்த வேண்டிய தொகைகளை தள்ளு படி செய்வதற்கு கூட்டு த்தாபனம் உ.இ.வ.தி. உடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றது. | வரிப் பொறுப்பை தீர்ப்பதற்கு நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கூட்டுத்தாபனத்தின் தலைவரால் வழங்க ப்பட்ட 1979 திசெ ம்பர் 20 ஆந் திகதிய 121/1979 ஆம் இலக்க கூற்றறிக் கையின் 2(இ) ஆம் பிரிவு | கட்டளைகளுடன் சேர்த்து காசோலைகளாக வழங்கப்படுகி ன்ற முற்பணங்கள் 30 நாட்களிற்குள் தீர்க்கப்படுதல் வேண்டும். இருப்பினும், ரூபா 256,635,937 தொகையான அத்தகைய முற்பணங்கள் 03 ஆண்டுகளிற்கும் மேலாக கூட்டுத்தாபனத்தில் தீர்க்கப் படாது வைக்கப்பட்டுள்ளன. அத்துடன், ரூபா 20,085,988 தொகையான கட்டளைகளுடன் இணைந்த காசோலை முற்பணங்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு NEMO ஆல் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணத்தை உடன டியாக தீர்ப்பதற்கு நடவ டிக்கை எடுக்குமாறு பொறுப்வாய்ந்த அதிகாரிகளிடம் ஏற்க னவே தெரிவித்துள் ளோம். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கு கவனம் செலுத்த வேண்டும். |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தின் தலைவரால் வழங்க ப்பட்ட 1979 திசெம் பர் 20 ஆந் திகதிய 122/1979 ஆம் இலக்க கூற்றறிக்கை யின் 2(இ) ஆம் பிரிவு | பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்காக வழங்கப்படுகின்ற காசு முற்பணங்கள் 14 நாட்களிற்குள் தீர்க்கப்படுதல் வேண்டும். இருப்பினும், ரூபா 14,263,413 தொகையான விசேட காசு முற்பணங்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 ஆண்டுகளிற்கும் மேலாக தீர்க்கப்படாது காணப்பட்டது. மேலும், தேசிய உபகரண மற்றும் | அவர்களின் சம்பளத் தில் இருந்து அறவிட்டு முற்பணத்தை தீர்ப்ப தற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கு கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரவியல் நிறுவனத்தினால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,653,621 தொகை தீர்க்கப் படாது காணப்பட்டது. | | |
| (உ) 1978 திசெம்பர் 10 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறை சேரிச் சுற்றறிக்கை | திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் NEMO நிறுவனத்தால் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவி ல்லை. | அவதானிப்புக்கு NEMO இன்னும் பதிலளிக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கு கவனம் செலுத்த வேண்டும். |

**1.8 காசு முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட வசதியை விட அதிகமாக ரூபா 45,430,869 வங்கி மேலதிகப்பற்றை கூட்டுத்தாபனம் பெற்றுள்ளது. | மோசமான காசோட்ட சூழ்நிலை காரணமாக இந்த வங்கி மேலதிகப்பற்றை எங்களால் தீர்க்க முடிய வில்லை. இருப்பினும், 2021 ஆம் ஆண்டில், இந்த மேலதிகமாக பெறப்பட்ட தொகை கடனாக மாற்றப் பட்டது. | கூட்டுத்தாபனத்தில் தொழிற்படு மூலதன முகாமைத்துவத்தை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) நிதிச் செலவில், 34 சதவீதம் அல்லது ரூபா 96,826,390 தொகை வங்கி மேலதிகப்பற்று மீதான வட்டிச் செலவை பிரிதிநித்துவம் செய்திருந்தது. | நிரந்தர வங்கி மேலதிகப் பற்று மற்றும் அதற்கான வட்டியை தீர்க்காமையால் வங்கி மேலதிகப்பற்று மீதான வட்டி செலவு அதிகரித் துள்ளது. கூட்டுத்தாபனத்தின் மோசமான காசோட்ட நிலை காரணமாக இந்த நிலை ஏற்பட்டது. | கூட்டுத்தாபனத்தில் தொழிற்படு மூலதன முகாமைத்துவம் மற்றும் காசு முகா மைத்துவத்தை பேணுவதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வங்கிக் கடன்களுக்கான வட்டி ரூபா 83,317,612 அல்லது 93.8 சதவீதம் அதிகரித்துள்ளது. முன்னைய ஆண்டைக் காட்டிலும் வட்டிச்சுமை கொண்ட கடன்கள் ரூபா 1,498,719,820 அல்லது 248 சதவீதம், அதிகரித்துள்ளமையால், எதிர்காலத்தில் செயற்திட்டங்களின் மூலம் போது மான இலாபத்தை கூட்டுத்தாபனம் ஈட்டத் தவறினால் நிதி நிலைமை மேலும் பலவீனமடையும். | 2016 ஆம் ஆண்டின் தொழிற்படு மூலதனத் தேவைகளுக்காக இலங்கை வங்கியிடமிருந்து ரூபா 2,100 மில்லியன் தொகையை கூட்டுத்தாபனம் கடனாகப் பெற் றது. தற்போதைய காசோட்டச் சிக்கலின் காரணமாக, கூட்டுத் தாபனத்தின் காசுப் பெறுவனவுகள் மேம்படும் வரை நீண்ட காலத்திற்கு இந்தக் கடன்களைத் தீர்க்க முடியாதுள்ளது. | கூட்டுத்தாபனத்தில் தொழிற்படு மூலதன முகாமைத்துவம் மற்றும் எரிய காசு முகாமைத்துவத்தை பேணுவதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 1,316,541,721 வரிக்கு முன்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடும் போது ரூபா 1,757,592,398 வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 441,050,677 குறைவொன்றை சுட்டிக்காட்டுகின்றது. வருவாய் மற்றும் ஏனைய வருமானம் என்பன குறைவடைந்திருந்தமையே இந்நிலைமைக்கு பங்களித்திருந்த பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நிர்மாணப் பிரிவினால் செயல்படுத்தப்பட்ட ரூபா 6,816,376,809 மதிப்பிலான நாற்பத்திரண்டு செயற்திட்டப் பணிகள் மீளாய்வாண்டில் ரூபா 508,324,458 நட்டத்தைச் சந்தித்துள்ளதுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின் திரண்ட மொத்த நட்டம் ரூபா 996,917,817 ஆகும். | இலாப எல்லை ஒன்றை வைத்து செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் உயர்மட்ட நிர்வாகத்திற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கடுமையான செயல் முன்னேற்றக் கண்காணிப்பு முறையைப் பயன்படுத்தி நட்டத்தை ஏற்படுத்தும் செயற்திட்டங்களைக் கண்டறியவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிசார் நட்டத்தை குறைப்பதற்கும் இலாபத் தன்மையை அதிகரிப்பதற்கும் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |
| (ஆ) நிர்மாண உபகரணப் பிரிவினால் செயல்படுத்தப்பட்ட ரூபா 327,438,891 மதிப்பிலான ஏழு செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் ரூபா 30,402,903 நட்டத்தை ஈட்டியிருந்ததுடன், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின் மொத்த திரண்ட நட்டம் ரூபா 72,049,447 ஆகும். | இலாப எல்லை ஒன்றை வைத்து செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் உயர்மட்ட நிர்வாகத்திற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கடுமையான செயல் முன்னேற்றக் கண்காணிப்பு முறையைப் பயன்படுத்தி நட்டத்தை ஏற்படுத்தும் செயற்திட்டங்களைக் கண்டறியவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிசார் நட்டத்தை குறைப்பதற்கும் இலாபத் தன்மையை அதிகரிப்பதற்கும் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |
| (இ) இயந்திரவியல் மற்றும் மின்சாரப் பிரிவினால் செயல்படுத்தப்பட்ட ரூபா 74,262,513 மதிப்பிலான நான்கு செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் ரூபா 1,263,361 நட்டத்தைச் சந்தித்துள்ளதுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின் மொத்தத் திரண்ட நட்டம் ரூபா 11,250,528 ஆகும். | இலாப எல்லை ஒன்றை வைத்து செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் உயர்மட்ட நிர்வாகத்திற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கடுமையான செயல் முன்னேற்றக் கண்காணிப்பு முறையைப் | நிதிசார் நட்டத்தைக் குறைப்பதற்கும் இலாபத் தன்மையை அதிகரிப்பதற்கும் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பயன்படுத்தி நட்டத்தை ஏற்படுத்தும் செயற்திட்டங்களைக் கண்டறியவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | தரமின்மை காரணமாக இரயில்வே திணைக்களத்தால் நிராகரிக்கப்பட்டிருந்த ரூபா 8,383,000 பெறுமதியான 1320 கொங்கிரீட் சட்டகங்கள் 05 வருடங்களுக்கும் மேலாக கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளன. | பொருளாதார ரீதியான பெறுமதிச் சேர்த்தல்கள் சாத்தியமாக காணப்படின் ஏனைய மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இழப்புகளை குறைக்கும் செயல்பாட்டில் கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ளது. | நிதிசார் நட்டத்தைக் குறைப்பதற்கும் இலாபத் தன்மையை அதிகரிப்பதற்கும் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |
| (உ) | NEMO ஆல் செயல்படுத்தப்பட்ட ரூபா 554,510,917 மதிப்பிலான இருபத்தி ஐந்து செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் ரூபா 67,798,319 நட்டத்தைச் சந்தித்துள்ளன. | NEMO ஆல் அவதானிப்புகளுக்கு இன்னும் பதிலளிக்கவில்லை. | நிதிசார் நட்டத்தைக் குறைப்பதற்கும் இலாபத் தன்மையை அதிகரிப்பதற்கும் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1. ஆம் பிரிவின் படி, வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த செயலாற்றல் அறிக்கை என்பன நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 735 நாட்கள் தாமதிக்கப்பட்டு 2021 யூலை 28 ஆந் திகதியன்றே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பதிலளித்திருக்கவில்லை | சுற்றறிக்கையின் படி இணங்கி ஒழுகுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |